**(சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**ஓ.எஸ்.எண். 67/2017** **நாள்.19.06.2023**

2023 ம் ஆண்டு ஜுன் திங்கள் 19 ம் நாள் வாதி தரப்பு 1 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோபால கிருஷ்ணன் | தொழில் | |
| த. பெ./க.பெ. | ஆண்டிகவுண்டர் | சாதி | |
| கிராமம் | அரியநல்லூர் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 64 |

**வ.சா.1**

**குறுக்கு விசாரணை**

I. எத்தனை அயிட்ட சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று எனக்கு தெரியாது. வழக்கு சொத்துக்கள் அரியநல்லூர் ,பூதேரி ஆகிய கிராமங்களில் உள்ளது. எனது தந்தை பெயர் ஆண்டிகவுண்டர் . ஆண்டிகவுண்டருக்கு நானும், பலராமன் என்பவரும் வாரிசுகள் . 1991 ல் ஆண்டிகவுண்டர் இறந்துவிட்டார். வழக்கு சொத்து சம்பந்தமாக 24.08.1999 ல் நானும், பலராமன் பாகபிரிவினை எழுதிக்கொண்டோம். மேற்படி பாக பிரிவினை பத்திரம் பதிவு செய்யப்பட்டதாகும். மேற்படி பாக பிரிவினை பத்திரத்தின் படி எனக்கு எ அட்டவணை சொத்துக்களும், பலராமனுக்கு பி அட்டவணை சொத்துக்களும் பாகமாக எழுதப்பட்டது. பாக பிரிவினைக்கு பிறகு பலராமன் இறக்கும் வரை பாக சொத்துக்களை தனிதனியாக அனுபவம் செய்து வந்தோம். பலராமன் இறப்பதற்கு முன்பு அவரது சொத்துக்களை அடமான வைத்துவிட்டார். அதனால் அடமானம் பெற்றவர் சொத்துக்களை அனுபவம் செய்து வந்தார்.

II. 15.07.1999 ல்சொத்துக்களை பலராமன் எனது அனுமதி இல்லாமல் சொத்துக்களை அடமானம் வைத்துவிட்டார். அதனால் பாக பத்திரம் எழுதிக்கொண்டோம். மேற்படி விவரத்தை வழக்குரையில் சொல்லவில்லை. பலராமனுக்கு பாகமாக வைத்திருந்த சொத்தை அவரது மனைவியான பிரதிவாதி அவர் பெயரில் 2017 ம் ஆண்டு பட்டா மாற்றி கொண்டதால் நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். பலராமன் பெற்ற கடன்களை நான் பைசல் செய்த பிறகு பிரதிவாதி அவருக்கு பெயருக்கு பட்டா மாற்றி கொண்டதால் நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். பலராமன் வழக்கு சொத்து சம்பந்தமாக உயில்

எழுதிவைத்ததால் அதன் அடிப்படையில் வழக்கு சொத்து எனக்கு உரிமையானது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 03.11.2005 ம் தேதி யில் பலராமன் இறப்பதற்கு 2 நாட்கள் முன்பு எனக்கு உயில் எழுதிவைத்தார். உயில் எழுதி வைத்த விவரம் எனக்கு 2012 ம் ஆண்டு தெரியவந்தது. உயில் எழுதிவைத்த விவரம் எனக்கு 2012 ம் வருடம் தெரிய வந்தது என்று வழக்குரையில் சொல்லவில்லை. உயில் பதிவு செய்யப்படவில்லை. அந்த உயிலை நான் பார்த்துள்ளேன். அந்த உயிலில் ஒருவர் தான் சாட்சி கையொப்பம் செய்துள்ளார். அந்த உயிலில் தொண்டுர் மனவாளன் என்பவர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார். உயில் கையால் எழுதப்பட்டதா, டைப் செய்யப்பட்டதா என்று எனக்கு ஞாபகம் இல்லை.

III. உயிலை எழுதியவர் பெயர் உயிலில் குறிப்பிடவில்லை. மனவாளன் என்பவர் உயிலில் 2 வது ஆக சாட்சி கையொப்பம் செய்துள்ளார். 1 வது சாட்சியாக யாரும் கையெழுத்து போடவில்லை. உயில் எத்தனை பக்கம் என்று எனக்கு ஞாபகம் இல்லை. உயிலில் முதல் பக்கத்தில் பலராமன் கையெழுத்து இடவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. இவ்வழக்கில் உயில் ஆவணத்தை குறியீடு செய்யவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை . வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள மற்ற 18 ஆவணங்களையும் குறியீடு செய்யவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் ஆண்டிகவுண்டருக்கு , அன்புசெல்வி , பூம்பாவை , திலகவதி ஆகியோர் வாரிசுகள் என்று சொல்லியுள்ளேன் என்றால் நான் நிரூபண வாக்குமூலத்தை படித்து பார்க்கவில்லை.

IV பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்தேன். பலராமன் இறப்பதற்கு 4 மாதத்திற்கு முன்பு மன பிறழ்ச்சியுடன் இருந்தார் என்றால் சரியல்ல. பலராமன் இறக்கும் போது நான் சென்னையில் இருந்தேன். 1994 ம் ஆண்டில் இருந்து நான் சென்னையில் இருந்தேன். பலராமன் இறப்பதற்கு 2 அல்லது 3 நாட்களுக்கு முன்பு சென்னையில் என் வீட்டிற்கு வந்தார். அவர் ஒப்பந்த அடிப்படையில் பள்ளி கட்டிடம் கட்டிவந்ததற்காக பணம் கேட்டு என் வீட்டிற்கு வந்தார். நான் பணம் கொடுக்கவில்லை காரணம் பணம் கொடுக்கும் அளவிற்கு என்னிடம் வசதி இல்லை. பலராமன் இறந்த அன்று காலை 10.30 மணிக்கு எனக்கு அவர் இறந்த தகவல் தெரிந்தது. பலராமன் உடன் அவரது 2 மகன்கள், 1 மகளும் கிணற்றில் விழுந்து இறந்துவிட்டார்கள். பலராமன் இறப்பதற்கு முன்பு கடிதம் எழுதிவைத்து இறந்துவிட்டார். அந்த கடிதத்தில் என்ன எழுதி வைத்திருந்தது என்று எனக்கு தெரியாது. தம்பியும், தம்பி குழந்தைகளும் இறந்துவிட்டதால் தம்பி மனைவியான பிரதிவாதி மட்டும் சொத்தை அனுபவிக்க கூடாது என்று உயிலை ஜோடித்துக்கொண்டேன் என்றால் சரியல்ல.

V. உயில் போர்ஜரியாக தயாரிக்கப்பட்டது என்பதாலும், உயிலின் வரையறைக்குள் இல்லை என்பதாலும் உயிலை நான் இவ்வழக்கில் குறியீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. உயில் போர்ஜரியாக தயாரிக்கப்பட்டது என்பதால் மற்ற ஆவணங்களையும் நான் இவ்வழக்கில் குறியீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. உயிலின் அடிப்படையில் வழக்கு சொத்து எனக்கு உரிமையானது என்று வழக்கு தாக்கல் செய்துவிட்டு உயிலை குறியீடு செய்யாததால் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.